Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆடு ஐப்பசி மீ 24 உ சனிக்கிழமை (10 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 21 ஓசை 256

## அகதிமுகாமிலிருந்து 60 தமிழர் இழுத்துச் செல்லப்பட்டனர்

(திருமலை)


சென்ற மாத கடைசிப் பகுதியில் இழப்பன்பே அகதிமுகாமிலிருந்து பிடித்துச் சென்ற தமிழர்கள் இருபத்திமூன்றுபேரை சுட்டுக் கொன்றுவிட்ட சிறிலங்கா ஆயுதப்படையினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் மீண்டும் அதே முகாமினுட் புகுந்து அறுபது அப்பாவி ஆண்களை இழுத்துச் சென்றுள்ளனர். இந்த ஆட்கடத்தல்பற்றி (4ஆம் பக்கம் பார்க்க)

யாழ். போதனா வைத்தியசாலை

# பாதுகாப்பு வலயத்தினுள் விமானங்கள் குண்டு வீசின

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம்

வைத்தியசாலை பாதுகாப்பு வலயம்



★ குண்டு வீச்சிற்கு இலக்கான இடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதியைச் சூழவுள்ள பாதுகாப்பு வலயத்தினுள் நேற்றுக் காலை ஏழு நாற்பத்தைந்து மணியளவில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் அத்துமீறி குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்று அதிகாலை ஏழு நாற்பத்தைந்து மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையின் வான் பகுதியில் வட்டமிட்ட சிறிலங்கா விமானப் படையின் சியாமசெட்டி குண்டு வீச்சு விமானம் தனது முதலாவது தாக்குதலை வைத்தியசாலையின் தென்கிழக்கு மூலையில் பலாலி வீதியில் நடத்தியது.

கடந்த ஆறாம் திகதி மாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைப் (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா விமானப்படையின் செயல் ஓர் அத்துமீறிய நடவடிக்கையாகும்

### சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்றுக்காலை சிறிலங்கா குண்டுவீச்சு விமானம் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களானது ஓர் அத்துமீறல் சம்பவமாகும் - இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பொறுப்பாளர் ஜோர்ஜ் நேற்றுப் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும் போது-

விடுதலைப் புலிகள், அரசாங்கம், சர்வதேச செ. சி. சங்கம் ஆகியவைகள் தரப்பில் ஏற்பட்ட முக்கூட்டு உடன்படிக்கையை மீறியது இக்குண்டுவீச்சுத் தாக்குதல் என்றார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் ஒருவர் பலி; ஒருவர்காயம், வீடுகள்சேதம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு குளங்கரை வீதியில் உள்ள குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் பலத்த குண்டுத் தாக்குதலை நடத்தியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார், பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை இப்பகுதி (4ஆம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம் என

## வரையறுக்கப்பட்ட பகுதியிலேயே விமானங்கள் குண்டை வீசின

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றியுள்ளபாதுகாப்புவலயத்தைப் பலமுறை சுற்றிச் சுழன்ற சிறிலங்கா விமானப்படை சியாமசெட்டி குண்டு வீச்சு விமானம் ஆஸ்பத்திரி - பருத்தித்துறை வீதிச் சந்தியில் தாழப் பறந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் குண்டுவீச்சு

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் பிரவேசித்த இரு குண்டு வீச்சுவிமானங்கள் குடியிருப்புக்கள் மீது பலத்த குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின. இந்தத் தாக்குதலில் நெடுங்குளம் சந்தியில் உள்ள வீடொன்று தரைமட்டமானது: அயலில் இருந்த நான்கு வீடுகள் கணிசமான சேதமடைந்தன.

இந்தப்பகுதி மக்கள் பதுங்குகுழிகளில் தஞ்சமடைந்திருந்தமையால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (11)

## பாஷையூரில் நால்வர் காயம் 15 வீடுகள் சேதம்

(குருநகர்)

ஆஸ்பத்திரி தாக்குதலை முடித்துக்கொண்டு சென்ற விமானங்கள் மீண்டும் பாஷையூர்ப் பகுதியில் வட்டமிட்டு இரண்டு குண்டுகளை வீசியதில் பதினைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாயின. கனகராசா ஜொய்சி (32) ராஜகுமார் (7), மேரகன் அன்ரன் (28), எமெலியாறூஸ் (32) ஆகிய நால்வரும் காயமடைந்தனர், அந்தோனி சிலுவைராஜா, மேரி ரோசலின், ம. கெனமன், பிலிப்பையா ஸ்ரஸ்லோஸ், ஜேகப் கிருஸ்ரியன், சி. ஜோன்பீற்றர், ம. ஜேசுதாசன், அன்சலம், எஸ். ஈ. ஜோசப், செகராசசிங்கம் பத்திநாதர் பிரான்சிஸ்கா துரைச்சாமி ஸ்பெல் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

நேற்று முன்தினம் பலாலி சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் லெப்டினன் சிரஞ்சீவி (கனகசபாபதி ஐங்கரன், சுன்னாகம்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி மாவிட்டபுரம் மோதலில் காயமடைந்த செந்தில் (சுப்பிரமணியம் ஞானேஸ்வரன் மாதகல்) என்ற போராளி நேற்று அதிகாலை வீரமரணமடைந்துள்ளார்.

நேற்று சிறிலங்கா இராணுவத்துடனான பல்வேறு மோதல் சம்பவங்களின்போது லோலோ (உடையார் மகாராசா அளவெட்டி) குட்மன் (தாமோதரம்பிள்ளை பிரபாகரன் தாவளை) அலெக்ஸ் (இட்ணர் சுகந்தன் வரணி), பழனி (கிளிநொச்சி) ஆகிய போராளிகள் வீரமரணத்தை தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (க)

## சாவகச்சேரியில் ஒருவர் பலி

(சாவகச்சேரி)

நேற்று சாவகச்சேரிப் பகுதியிலும் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியுள்ளன.

சாவகச்சேரி தபால் நிலைய வீதிப்பகுதியில் குண்டுவீச்சால் வீடுகள் பல சேதமுற்றுள்ளதாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிப்பதுடன் மேலும் இத்தாக்குதலில் ஒருவர் பலியானதாகவும் தெரிவிக்கின்றன. (லோ)

## திருநெல்வேலியில் மாலை நேர தாக்குதல்

காலை பதினொருமணி வரை நகரின் பல பகுதிகளையும் கலக்கிய குண்டுவீச்சு விமானங்கள் மீண்டும் மாலை மூன்றரை மணியளவில் திருநெல்வேலியில் குண்டு வீச்சை மாறி மாறி நிகழ்த்தின. இந்தக்குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசுதற்கு ஒரு ஹெலிகொப்ரர் தலைமை தாங்கியதுடன் இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தது. இந்தத் தாக்குதலி (4 ஆம் பக்கம் பார்க்க)

## கும்புறுப்பிட்டி காட்டுப்பகுதியில் மூன்று படை பலி; பலர் காயம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கும்புறுப்பிட்டி காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பல படையினர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இக்காட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

### விற்பனைக்கு

கால்நடை தீவனமாகவும் விறகாகவும் பயன்படும் இப்பில் இப்பில் விதைப் பைக்கற் பெற்றிட ரூபா. 2 00க்கான அஞ்சல்முத்திரை அனுப்பவும். மில்க்வைற் - யாழ்ப்பாணம். (B-1574)

### காணவில்லை

வீட்டில் இருந்து எதிர்பாராதவிதமாக வெள்ளை, கழுத்தில் கறுப்பு நிற, நிறைமாத குட்டித் தாச்சி ஆடு 6-11-90 முதல் காணவில்லை. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். 01/01, யாழ் வீதி, (கைலாசபிள்ளை மருந்துக்கடை முன்பாக) யாழ்ப்பாணம். (R/820)

### ''இராவணன் கோட்டை''

மீரா வெளியீடு சிறுவர்களுக்கான கதை மாயாஜால மந்திர தந்திர வீரதீரச்செயல்கள் நிறைந்தது. ரூபா 20/-. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் (R-809)

# வாரத்தில் மூன்று தடவைகள் அனலைதீவுப் படகுச் சேவை

(புங்குடுதீவு)

அனலைதீவுக்கான படகுச் சேவை தற்போது வாரத்தில் மூன்றுநாள்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிகாட்டுவான் துறை ஊடாக திங்கள், புதன், சனி ஆகிய மூன்று நாட்களிலும் நடாத்தப்படும் இச்சேவையில் ஈடுபடும் படகு, சேவை நாள்களில் காலை எட்டுமுப்பது மணியளவில் குறிகாட்டுவான் துறைக்கு வந்து மீண்டும் பிற்பகல் இரண்டுமுப்பது மணியளவில் அனலைதீவுக்குச் செல்கின்றது.

மேற்படி சேவையில் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் அனைவரும் வரும்போதும் போகும்போதும் நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படை முகாமில் உள்ள சோதனைச் சாவடியில் தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்ட பின்பே பயணத்தைத்தொடர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (22)

## மரணச் சடங்குக்கு 2000 ரூபா

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கையால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2000 ரூபா வீதம் மரணச் சடங்குகளுக்கான செலவு கிளிநொச்சி அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகரினால் வழங்கப்படுகிறது.

அண்மையில் மரணமடைந்த 37 பேரின் குடும்பங்களுக்கு 74 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களுடன் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (49)

## போலி மருந்து விற்பனை

(யாழ்ப்பாணம்)

கிறைப் வார்ட்டர் என்ற குழந்தைகளுக்கான ஆங்கில மருந்தின் பெயரில், அதே புட்டிகளில் அடைக்கப்பட்ட போலி கிறைப் வார்ட்டர் ஆனைக்கோட்டையிலும், அண்டிய பகுதிகளிலும் விற்பனையாகிறது.

பாலூட்டும் குழந்தைகளுக்கு பருக்கப்படும் நிவாரணியான அசல் கிறைப் வார்ட்டரை விட போலி கிறைப் வார்ட்டரில் நிறமும்மாறுபட்டுள்ளது. பெற்றோர்கள் அவதானமாயிருப்பது விரும்பத்தக்கது.

## உருவாக்கம்

மறுபிறப்பு உண்டா?
இல்லையா?
புலியை சுட்டுப் பாருங்கள்
தெரியும்.
கவிஞரின் கூற்று நன்றன்று:
பௌத்தமும் சிங்களமும்
இன்னும் சில சக்திகளும்
உருவாக்கி
உதவுகின்றன.

-பைப்

# தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் உரம் வழங்கப்பட்டது

(கொடிகாமம்)

நாட்டில் விவசாயத்தை விருத்தி செய்யும் பொருட்டு தமிழீழ ஆய்வு நிறுவனம் கணிசமான அளவுள்ள (150 தொன்) உரத்தை கொடிகாமம் விவசாய உற்பத்திக்குழுவிற்கு வழங்கியுள்ளது.

வீ-வண், அமோனியம் சல்பேற் ஆகியன இவர்களால் வழங்கப்பட்ட உரங்களாகும் இந்த உரம் உற்பத்திக் குழுவின் சிபார்சின்படி விவசாயிகளுக்கு வழங்குமாறு தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி இழக்குப் பகுதிகளிலும் வேறு இடங்களிலும் விவசாய உற்பத்திக் குழுவினரால் உரம் வழங்கப்படுகின்றது. (86)

## கணக்காளர் நேர்முகப் பரீட்சை

மேற்படி சமாசத்தில் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தோருக்கான நேர்முகப் பரீட்சை 18. 10. 90 ஞாயிற்றுக்கிழமை காலை 09. 00 மணிக்கு திருநெல்வேலி யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள சமாசக் காரியாலயத்தில் நடைபெறும்.

இப்பதவிக்கான அடிப்படைத் தகுதி உள்ளவர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப் பிரதிகளுடன் உரிய நேரத்திற்குச் சமுகம் தரவும்.

தபால் விநியோகம் சீராக இல்லாமையால் இந்த அறிவித்தலைச் சகல விண்ணப்பதாரரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெங்கு பனம்பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,

B/1576

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
01
05
69



ஆழியின் கரையில்
14
08
90

### இராமச்சந்திரன் அன்புசிவம்

திரைகடலோடி திரவியம் தேடாமல்
அலைகடலோடும் அற்புதப் பணியதில்
விடியலை நோக்கிய விரைவுப் பயணத்தில்
அலைகடலோரத்தில் அஸ்தமித்துப் போனவனே
உப்புக் காற்றுடன் கலந்த உன் இறுதி மூச்சு
வெம் கனலுடன் மீண்டும் சுழன்று வீசும்
விழியதில் தேக்கிய ''ஈழக்கனவுகள்''
விரைவாய் உதிக்கையில் உன் புகழ்பாடும்
அர்ச்சனைப் பூக்களாய் உன்கல்லறை மேட்டினில்
அவை காவியம் பாடும்.

11. 11. 1990 ஞாயிறு காலையில் இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும்.

-வல்வை மக்கள்

( R/ 802 )

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி

# கேள்வி அறிவித்தல் 1991

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றை 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28-11-1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை வலிகாமம் கிழக்குப்பிரதேச சபை, நீர்வேலி தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விப் பத்திரங்கள் யாவும் அப் பகுதி பிரதேச சபை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளால் கேள்வி வைப்புப் பணமும், கேள்விப் பத்திர பணமும் செலுத்துவதின் பேரில் 23. 11. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப் பிரதியை, விசேட ஆணையாளர் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகம் நீர்வேலி என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி தலைமை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இணைப் பிரதியை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், இன்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை எடுத்து நடத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவதொன்றை மீறுமிடத்து எதுவித நட்ட ஈடுமின்றிக் குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. வேறு விபரங்கள் அறிய விரும்பின் அந்தப் பிரதேச சபை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி தனேஸ்வரி பாஸ்கரன்,
விசேட ஆணையாளர்.
வலி. இழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி

வலி. இழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி. 30. 10, 1990

| உப அலுவலகம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| **உரும்பிராய், ஊரெழு** | | | |
| 1) உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 100 00 | 500 00 | 44160 00 |
| 2) உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 500 00 | 40000 00 |
| 3) ஊரெழு மாட்டிறைச்சிச் கடை | 50 00 | 100 00 | 5000 00 |
| 4) உரும்பிராய் மத்திய சந்தை | 100 00 | 500 00 | 14621 00 |
| 5) ஊரெழு சந்தை | 50 00 | 100 00 | 600 00 |
| 6) ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 100 00 | 12000 00 |
| **நீர்வேலி** | | | |
| 1) நீர்வேலி வடக்குப் பொதுச் சந்தை | 25 00 | 100 00 | 1296 00 |
| 2) நீர்வேலி மத்திய சந்தை | 25 00 | 50 00 | 180 00 |
| 3) நீர்வேலி உப அலுவலக வளவு | 25 00 | ——— | 120 00 |
| 4) நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 25 00 | 100 00 | 1200 00 |
| 5) நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 25 00 | 100 00 | 2400 00 |
| **அச்சுவேலி** | | | |
| 1) அச்சுவேலிப் பொதுச் சந்தை | 100 00 | 1000 00 | 153060 00 |
| 2) அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 1000 00 | 203694 00 |
| 3) அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 100 00 | 500 00 | 6900 00 |
| 4) வளலாய்/தம்பாலை பொதுச்சந்தை | 25 00 | 50 00 | 990 00 |
| **புத்தூர்** | | | |
| 1) புத்தூர் மத்திய சந்தை | 50 00 | 100 00 | 12122 00 |
| 2) புத்தூர் மத்திய சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 250 00 | 38268 00 |
| 3) ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 25 00 | 100 00 | 1458 00 |
| 4) ஆவரங்கால் மீன் சந்தை | 25 00 | 100 00 | 2892 00 |
| **கோப்பாய்** | | | |
| 1) இருபாலை மீன் சந்தை | 25 00 | 100 00 | 1320 00 |
| 2) இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 50 00 | 250 00 | 6000 00 |
| 3) இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 50 00 | 250 00 | 15000 00 |

(B-1572)

**சிந்தனைக்கு**

ஏமாற்றுதலைத் தொழிலாகக் கொண்டவனை திருத்த முடியாது.

— வோல்டர் ஸ்கொட்

ஈழநாதம்

81, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 10-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# ஒப்பந்த மீறுதல்கள் சிறிலங்காவிற்கு புதிதல்ல

யாழ் போதனா வைத்தியசாலையைச் செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று, அதனை ஒரு 'பாதுகாப்பு பகுதி' எனப் பிரகடனப்படுத்தி, வைத்தியசாலை இயங்க இருந்த நேற்றுக் காலையே சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பாதுகாப்புப் பகுதிக்குள் குண்டு வீச்சு நடத்தின.

யாழ் போதனாவைத்தியசாலையை பொறுப்பேற்றபோது செஞ்சிலுவைச்சங்கம், ஆஸ்பத்திரி சம்பந்தமாக ஒரு ஒழுங்கு விதிகளையும் வெளியிட்டு, ஒழுங்கு விதிகளைச் சம்பந்தப்பட்ட எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இந்த ஒழுங்கு விதிகள் யுத்தம் நடைபெறும் சூழ்நிலைகளில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப் பட்டவை எனவும் தெரிவித்திருந்தது.

ஆனால் நேற்று எதுவித காரணமும் இல்லாமல், (அதாவது சிறிலங்கா அரசாங்கம் கூறுமாப்போல் 'புலிகளின் இலக்குகள்' எதுவும் இல்லாமலே) ஆஸ்பத்திரியின் 'பாதுகாப்புப் பகுதிக்குள்' சிறிலங்கா விமானப்படைவிமானங்கள் குண்டுவீச்சை நடத்தியுள்ளன. இதன்மூலம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் குறிப்பிட்டு இருந்த சர்வதேச விதிமுறைகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கொடுத்திருந்த வாக்கையும் சிறிலங்கா அரசாங்கம் மீறியுள்ளது.

சர்வதேச யுத்த ஒழுங்குமுறைகளைச் சிறிலங்கா அரசாங்கம் மீறுவது இது முதல் முறையல்ல. அப்பாவி மக்களைப் படுகொலை செய்தல், மக்கள் வாழும் பகுதியில் குண்டு வீச்சு நடத்துதல், மக்களை கேடயமாகக்கொண்டு முன்னேறுதல், கோவில்கள், நூலகங்கள் போன்றவற்றை இட்டமிட்டே அழித்தல், மக்கள் செறிவான வாழ்விடப் பகுதிகளில் இரசாயனக் குண்டுகளை வீசுதல் என்பன சிறிலங்கா அரசாங்கத்தால் முன்னரே பல தடவை மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஒழுங்குகளுக்குப் புறம்பான போர் முறைகளாகும்.

அத்தோடு ஏமாற்றுகள், ஒப்பந்தங்களை மீறுதல், யுத்த நிறுத்தத்தை மீறுதல் போன்ற நேர்மையற்ற செயல்களும் சிறிலங்கா அரசாங்கங்களின் வழமையான நடவடிக்கையாகும். கடந்த காலத்தில் பலமுறை தமிழர் இவற்றை அனுபவித்துள்ளனர். இதன் காரணமாகவே இன்று சிறிலங்கா அரசாங்கத்தின் எந்தவொரு வாக்குறுதியையும் தமிழர்கள் நம்பத் தயாராக இருக்கவில்லை.

கடந்த காலத்தில் தமிழரை ஏமாற்றியது போன்று, சர்வதேச ஸ்தாபனங்களை ஏமாற்றும் விடயத்தில் இன்று சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. யாழ். போதனா வைத்திய சாலையைத் திறப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் சகல உதவிகளையும் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கும் என பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் 'ஆஸ்பத்திரி பாதுகாப்பு பகுதிக்குள்' விமானப்படை குண்டுவீச்சு இடம் பெற்றுள்ளது. இது சர்வதேச விதி முறைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறிவிட்டு சிறிலங்கா அரசாங்கம் அவற்றை மீறிய செயலாகும். அதாவது ஏமாற்றுச் செயலாகும்.

இது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து வழமையான நடவடிக்கைதான் ஆனால் இச் சம்பவம் வெளிக்கொண்டுவரப்படுவதன் மூலம், இலங்கைத் தமிழர் விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் கடந்தகாலத்தில் எவ்வாறு நடந்துகொண்டிருக்கும் என்பதும, அரசாங்கத்தின் வாக்குறுதிகள் எவ்வகையானவை என்பதையும் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

# வவுனியாவில் வங்கிகள் ஒருமணி நேரமே செயற்பாடு

(வவுனியா)

வவுனியா வங்கிக் கிளைகள் செயற்படத்தொடங்கி விட்ட போதிலும், தினம் ஒருமணி நேரமே அவை செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ சோதனை முகாம்களில் பலமணி நேரம் செலவழித்து வங்கிக்கிளைகளில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யச் செல்வோர், அவை மூடப்பட்டதன் பின்பே வவுனியா நகரத்தைச் சென்றடைகின்றனர்.

வவுனியா வங்கிக் கிளைகள் யாவும் காலை 9 மணிக்குத் திறக்கப்பட்டு 10-00 மணிக்கு மூடப்படுகின்றன. (தி)

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



''முகாமுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் வருவார்கள், மிகக்கடுமையானநோயாளிகளை திருக்கோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேண்டியிருக்கும், ''நாங்கள் எங்களுடைய வாகனத்தில் உங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிறோம். ஆனால் இடையில் இராணுவமோ, முஸ்லிம் ஊர்காவல் படையோ உங்களை எமது வாகனத்திலிருந்து இறக்கிக் கொண்டு போனால்எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. இதற்குச் சம்மதமானால் வாகனத்தில் ஏறுங்கள்'' என்று கூறுவார்கள். யாராவது போகச் சம்மதிப்பார்களா? நடப்பது நடக்கட்டும் என்று இங்கே கிடந்து சாக வேண்டியதுதான்!'' என்றார். வாகனங்களில் இருந்து இவ்வாறு யாராவது இறக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்களா? என்று கேட்டேன். ஆலங்கேணியில் மூன்றுபேரும் ஜெயபுரவில் ஒன்பது பேரும் இவ்வாறு இறக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அது சண்டை தொடங்கியவுடன் இ.போ.ச.பஸ்களில்இருந்து'' என்றார்.

சரி செஞ்சிலுவைச் சங்கத்தை விடுங்கள். வேறு யார் யாரிடம் இந்தவிடயங்கள் தொடர்பாகமுறையிட்டிருக்கிறீர்கள்? என்றேன். பச்சநூர் முகாமுக்கு பாராளுமன்றத் தூதுக்குழுவொன்று அகதிகளைப் பார்வையிட வந்தது. அதில் மாவை சேனாதிராசாவும் வந்திருந்தார். அகதிமுகாம் கொடுமைகளை அவரிடம் சொல்லி எமது பாதுகாப்புக்கு ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள் என்று அவரிடம் அகதிகள் கேட்டார்கள். ''எங்களுக்கே பாதுகாப்பு இல்லை. உங்களுடைய பாதுகாப்புக்கு நாங்கள் என்ன செய்வது'' என்றார் மாவை சேனாதிராசா இதற்குப் பின் அவர்களோடு பேச என்ன இருக்கிறது? என்று வினாவினார்.

உயர் இராணுவ அதிகாரிகள் யாரிடமாவது நீங்கள் இது சம்பந்தமாகக் கதைக்கவில்லையா?என்று கேட்டேன். இந்தப் பகுதியில் சுரேஸ் காசிம் என்ற முஸ்லிம் இராணுவ அதிகாரிதான் எல்லா நடவடிக்கைகளுக்கும் காரணமாக இருக்கிறான். அவனிடமும் மக்கள் கேட்டார்கள். 'பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களின் நிலைமை என்ன மாதிரி?' என்று. அதற்கு அவன் சொன்ன பதில் 'அகதிமுகாம்களில் இருந்து பிடிபடுபவர்களைப் பற்றி மட்டும் எதுவும் கேட்க வேண்டாம். சாப்பாடு இல்லை, தண்ணீர் வசதி இல்லை இதைப் போன்ற குறைபாடுகளைச் சொல்லுங்கள். நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்கின்றான் என்றார் அவர். நானும் சுரேஸ் காசிமைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் தான் என்றேன் நான்.

'போன கலவரத்தில் ஆலங்கேணியில் இருந்த ஒரு பெண்பிள்ளையைத் தேடிப் போயிருக்கிறான் சுரேஸ் காசிம். அந்தப்பிள்ளை இயக்கத்துக்கு நல்ல உதவி. வீட்டுக்குப் போய் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடன் அந்தப் பிள்ளையின் தங்கச்சிதான் முன்னுக்குப்போனது. அக்காவுக்கு ஆபத்து என்பதைத் தெரிந்து கொண்டு நான்தான் அவள் என்று சொன்னது. தலையிலிருந்து கால்வரை மூன்று மகஸீன் பொழிந்து தள்ளினான். ஆள் இரண்டாகப் போய்விட்டது என்றார். 'என்ன இயக்கப் பாஷையெல்லாம் பேசுகிறீர்கள்?' என்று கேட்டேன். நாளாந்தம் இயக்கத்தோடுதான் பழகுகிறோம். திருக்கோணமலையைப் பொறுத்தவரை இயக்கமும் பொதுமக்களும் வேறு வேறல்ல எல்லாப் பிரச்சினையும் எல்லோருக்கும் தான் என்றார் அவர். சரி மீண்டும் சந்திப்போம் என்று அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டோம்.

**9**

போகும் வழியில் பதுமனுக்கு ஒருசெய்தி கிடைத்தது. 22-09-90 அன்று புதுக்காலே என்ற இடத்தில் சிங்கள ஊர்காவல் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதில் மூன்று ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டதாயும் இரண்டு சொட்கண்கள், எட்டுத்தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதாயும் அச்செய்தியில் விபரமாக எல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தது.

> எங்களுக்கே பாதுகாப்பு இல்லை. உங்களுடைய பாதுகாப்புக்கு நாங்கள் என்ன செய்வது?
> மாவை சேனாதிராசா - பா. உ.

நாம் போய்ச் சேர்ந்த முகாமில் இருதினங்கள் தங்கினோம், பின்னர் 24-09-90 அன்று பிற்பகல் எமது பயணம் ஆரம்பமானது. இப்பயணத்தில் 1979 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இயக்கத்துடன் ஈடுபாடு கொண்ட ஒருவரைச் சந்தித்தோம்.

அன்றிலிருந்து இவரும் எமது பயணத்தில் இணைந்து கொண்டார். இவரது பெயர் துரைநாயகம். நான்கு பிள்ளைகளின் தந்தை. சிறிலங்கா, இந்திய இராணுவங்களிடம் பிடிபட்டு சிறையில் இருந்தவர். திருமலைபற்றிய புள்ளி விபரங்கள் நிறையவே வைத்திருந்தார். எந்தச் சம்பவத்தைக் கேட்டாலும் திகதிவாரியாகக் கூறுவார். அவ்வளவு ஞாபகசக்தி படைத்தவர். பொதுமக்களை நாங்கள் சந்தித்த பின்னர்தான் திருமலையில் எவ்வளவு குடும்பஸ்தர்கள் முழுநேர உறுப்பினர்களாக பணியாற்றுகின்றார்கள் என்பதை உணர முடிந்தது. இவர்களை வெறும் ஆதரவாளர்களாக கருதமுடியாது: ஆயுதங்களையும் தூக்கிக் கொண்டு தமது கடமைகளில் முழுமூச்சாக ஈடுபடுவார்கள். ''கலியாணம் மட்டும் முடிக்காமலிருந்தால் உங்களைவிட நான் தீவிரமாயிருப்பேன்'' என்று வீரம் பேசும் யாழ்ப்பாணத்துக் குடும்பஸ்தர்கள் பலரை நினைத்துக்கொண்டேன்.

இந்தப்பாதை அட்டைகள், முதலைகள் உள்ள பாதையென்றார் பதுமன். கறுப்பு நிறமான அட்டைகள் உடலில் பிடித்துக்கொள்ளும் அப்படியே எமது உடலில் உள்ள இரத்தத்தை உறிஞ்சியெடுக்கும் இலேசில் பிடுங்கியெறிய முடியாது.

பிடுங்கியதும் உடம்பிலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டேயிருக்கும். நிறுத்துவது கஷ்டம் என்றார். முதலைகள் பற்றிக்கேட்டபோது கும்புறுபிட்டியைச் சேர்ந்த ராஜன் என்றபோராளி முதலைக்குப் பலியாகியுள்ளான், 85 ஆம் ஆண்டு அந்தச் சம்பவம் நிகழ்ந்தது என்று கூறினார் அவர். பெரும்பாலும் விலங்குகளைத்தான் முதலை பிடிக்கும் என்றாலும் பெரிய முதலைகள் மனிதர்களை இழுத்துக் கொண்டு போகும் என்றார். ''முதலைபிடித்து யாராவது தப்பியுள்ளார்களா?'' என்று கேட்டேன், அப்போது துரைநாயகம் குறுக்கிட்டு ''வள்ளி என்ற பெண்ணை முதலை பிடித்தது. பெரிய போராட்டமே நடத்தித்தான் அப்பெண்ணைக் காப்பாற்றமுடிந்தது இப்போதும் அந்தப்பெண் உயிருடன் இருக்கிறார். இப்போது அவரை ''முதலை வள்ளி'' என அழைப்பார்கள்'' என்றார்- பொருத்தமான பெயர்- வேறு என்ன மிருகங்களால் தொல்லை எனக் கேட்டேன். பாம்பு, யானை, கரடி இவைதான் மிகக் கூடிய தொல்லை கொடுக்கக் கூடியன. மட்டக்களப்புத் தளபதி கருணாவைக் கூட கரடி ஒரு தடவை பிடித்தது'' என்றார் பதுமன். மட்டக்களப்பில் உள்ள கரடியனாற்றைச் சேர்ந்த துமிலன் (விஜயகுமார்) என்ற போராளி பாம்பு கடித்து இறந்த சம்பவம் எனக்கு ஞாபகம் வரவே திருமலையில் யாருக்காவது பாம்பு கடித்ததா என்று கேட்டேன், ''சமீபத்தில்கூட காயமடைந்த ஒரு போராளியைக் கொண்டு வரும்போது இராணுவத்தினர் தாக்கினார்கள், இராணுவத்தினருடன் மோதிக் கொண்டு ஒரு பற்றைக்குள் போகும் போது ஒருவனுக்கு பாம்பு கடித்தது. இருக்கும் இடத்தில் பாம்பு. எதிரில் இராணுவம். போராளிகளின் நிலை எப்படியிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்' என்றார். தொடர்ந்து ''இப்படி காயமடைந்தவர்களைக் கொண்டு வரும்போது மட்டும் பன்னிரண்டு போராளிகளை இழந்துள்ளோம்' என்றார்.

சிங்கள இராணுவம், சிங்கள ஊர்காவல்படை, முஸ்லிம் ஊர்காவல்படை, அட்டை, பாம்பு, கரடி, யானை, காட்டிக் கொடுப்போர் இப்படி எத்தனை விலங்குகளுடன் தான் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது என்று நினைத்துக் கொண்டேன்.

(தொடரும்)

# துர்க்காபுரம் தபாலகத்தில் ஓய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் இருந்த ஓய்வூதியர்கள் தமது செப்ரெம்பர்மாத ஓய்வூதிய வவுச்சர்களை துர்க்காபுரம் தபாலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு ஓய்வூதியக்கிளைபிரதம கணக்காளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். நகர எல்லைக்குள் இடம்பெயர்ந்து வந்திருக்கும் ஓய்வூதியர்கள் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் யாழ். செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் கிராமிய வங்கிகளில் தமது ஓய்வூதியப் பணத்தை பெறுபவர்கள் அனைத்து கிராமிய வங்கிகளிலும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறினார். (லோ)

## இலங்கை வங்கி மேல்தரக் கிளையில்

# பொதுமக்கள் பாதுகாப்புக்கருதி சில ஒழுங்கு முறைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மேல்தரக் கிளைக்கு அருகாமையில் நேற்றுக் காலை 7.45க்கு இடம்பெற்ற வானத்தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு சில ஒழுங்கு முறைகளை வங்கியின் பிரதான முகாமையாளர் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

இதன்படி வங்கிக்கு பணம் மீளப் பெறுவதற்கு வரும் வாடிக்கையாளரில் முதல் 200 பேர் வங்கி வளவினுள் அனுமதிக்கப்படுவர்.

வங்கிவளவிலுள்ளோ அதன் முன்புற வீதியோரமாகவோ துவிச்சக்கர வண்டிகள் உட்பட எதுவித வாகனங்களும் நிறுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

பணவைப்பைப் பொறுத்து அவர்களில் முதல் வருபவருக்கு முதற் கொடுப்பனவு என்ற ரீதியில் பணம் வழங்கப்படும்.

மேற்கூறிய இந்த நடைமுறைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அனுசரிக்கப்படும் என்றும், இதற்கு சகலரையும் ஒத்துழைப்பு நல்குமாறும் வங்கி முகாமையாளர் கேட்டுக்கொண்டார்.

# இந்தியாவில் புதிய அரசமைக்க சந்திரசேகருக்கு ஜனாதிபதி அழைப்பு

(டில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக சோஷலிச ஜனதாதளத் தலைவர் சந்திரசேகர் இன்று காலை 11.00மணிக்கு பதவியேற்கிறார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். இதற்கு முன்னதாக சந்திரசேகர் ஜனாதிபதியைச் சந்தித்து தம்மை அரசாங்கம் அமைக்க அழைத்தால் தமது பெரும்பான்மை பலத்தை லோக்சபாவில் நிரூபிப்பேன் என்று கூறியிருந்தார்.

அத்துடன் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தியும் தாம் நிபந்தனை அற்ற ஆதரவினை சந்திரசேகருக்கு வழங்க இருப்பதாகக் கூறியிருந்தார். அத்துடன் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக், பகுஜன் சமாத் கட்சி ஆகியனவும் தமது ஆதரவினை தெரிவித்திருந்தன.

ஜனாதிபதியை சந்திக்க முன்னர் சந்திரசேகர் குஜராத் பவனில் தமது கட்சியினருடனும், பிற தலைவர்களுடனும் நேற்றுக் காலை பேச்சுக்களை நடத்தினார்.

இவருடன் குஜராத் முதலமைச்சர் சிமன் பாய்பட்டேல், முன்னாள் ஹரியானா முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா, மேனகாகாந்தி, சுப்பிரமணிய சுவாமிகள் ஆகியோரும் இருந்தனர்.

இதேவேளை தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் பல கட்சித் தலைவர்களுடனும் பேசும்போது அவர்கள் வெவ்வேறு விதமான கருத்துக்களைக் கூறினர்.

### எல். கே. அத்வானி

இப்போது நிலவும் அரசியல் தேக்க நிலையை அகற்றுவதற்கு இடைக்காலத் தேர்தல்தான் ஒரே தீர்வாக அமையும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைலர் எல். கே. அத்வானி தெரிவித்தார்.

### சோமநாத் சட்டர்ஜி

ஒப்பேற்றத்தக்கதோர் அரசாங்கத்தை அமைத்திட தமது கட்சியால் இயலாது என்று இடதுசாரிக் கட்சித் தலைவர் சோமநாத்சட்டர்ஜி கூறினார்.

### இடதுசாரிக்கட்சித் தலைவர்கள்

சந்திரசேகர் தலைமையிலான குழுவிற்கு பொதுமக்களிடம் இருந்தான ஆதரவு இல்லை என்று இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் கூறியுள்ளார்கள்.

### ராஜீவ் மறுப்பு

இதேவேளை நேற்று இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தற்போது தனிப் பெரும் கட்சியாக திகழும் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தியை அரசமைக்கும்படி கேட்டதற்கு ராஜீவ் காந்தி மறுப்புத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### சிறிலங்கா

குண்டுவீச்சை மேற்கொள்வதற்கு ஏதாவது தூண்டுதல் காரணமாயிருக்கலாமா? என்று எமது நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்

அப்படியான ஒரு தூண்டுதல் எதுவும் இல்லை. இது வேதனையான விஷயம். இப்படியான அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெறுவதை நாம் இனிமேல் அனுமதிக்கப் போவதில்லை. அத்துமீறல்களை நிறுத்துவதற்கு மாற்றுவழிகள் உண்டு. அவற்றை விளக்குவது சுலபமானது, செயற்படுத்துவது கடினம். நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது தலைமைச் செயலகம். இங்கிருந்து எதையும் முடிவுகட்ட முடியாது என்றார். கொழும்பில் எமது தலைமைச் செயலகம் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவையும் ஜனாதிபதி காரியாலயத்தையும் அணுகித் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜோர்ஜ், அரசாங்கம் இக்குண்டு வீச்சுச் சம்பவத்தைப் பூசிமெழுகி அறிக்கை வெளியிட முடியாது. காரணம், இது எமது கண்ணெதிரிலேயே நிகழ்ந்த சம்பவமாகும் என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஆஸ்பத்திரிப் பாதுகாப்பு வலயத்தில் எந்தவகை ராணுவ நடவடிக்கைகளும் இல்லை. குடிமனைப் பகுதிகளே குண்டு வீச்சுக்கு உட்பட்ட இலக்குகளாகும். இச் சம்பவமானது சர்வதேச நியமங்களுக்கு மாறானதும், சர்வதேச செ. சி. சங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையாகும். பாதுகாப்பு வலய வரைபடத்தை அங்கீகரித்த அரசாங்கம் அப்பகுதியில் அத்துமீறிச் செயலாற்றியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இவ்வகையான பாரதூரமான அத்துமீறல் சம்பவங்கள் இனிமேலும் நடக்கமாட்டாது என்பதற்கு அரசாங்கம் உத்தரவாதம் தரவேண்டும் என்று கோரிக் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைக் குழு அரசாங்கத்தை நேற்று வற்புறுத்தியுள்ளது.

ஆஸ்பத்திரி வளாகத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயத்துக்கு மதிப்பளிப்பதன் மூலம், போதனா வைத்தியசாலை இயங்கும் வகையிலான மனிதநேய சேவைக்கு உதவுமாறும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு அதன் செய்திக் குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளது.

### திருநெல்வேலியில்

லும் பொதுமக்களின் வாழ்விடங்கள் மூன்று கடுமையான சேதத்திற்குள்ளாகியது மேலும் குண்டுவீச்சு விமானங்கள் தமது தாக்குதலை நிகழ்த்தி விட்டு சென்றுவிட்ட போதிலும் ஹெலிகொப்ரர் அப்பிரதேசத்தை வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. (லோ)

### அகதி

தெரியவருவதாவது: கடந்த ஏழாம் திகதி சீனன் குடாப் பகுதியில் கிழப்பன்பே என்ற இடத்தில் அமைந்துள்ள அப்பாவிப் பொதுமக்களின் முகாமை சிங்கள இராணுவ அணியினரும், முஸ்லிம் ஊர் காவற்படையினரும் சுற்றிவளைத்தனர். இவ்விரு படையினரும் ஏற்கனவே அயற் கிராமங்களில் குடியிருந்த மக்களின் வாழ்விடங்களில் அட்டகாசம் புரிந்து கொடுமைகள் பல செய்ததால் தமது வீடுவாசல்களை விட்டு மக்கள் எல்லோரும் ஒன்றாக இந்த முகாமில் வந்து தங்கியிருந்தனர்.

இவர்களை சுற்றிவளைத்ததுடன் அப்பாவிகளான அறுபது பேரை தெரிந்தெடுத்து தமது இராணுவ முகாம்களுக்கு இந்த அறுபது பேரின் உறவினர்களும் கதறி அழஅழ இழுத்துச் சென்றுள்ளனர். இவர்கள் பற்றிய விபரம் எதுவும் இன்னும் தெரியவரவில்லை. (க)

### கும்புறுப்பிட்டிக்

டுப் பகுதிக்குள் நுழைந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.

இதேதினம் இறக்கக்கண்டிக்கும், கும்புறுப்பிட்டிக்குமிடையில் ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் புலிகள் வைத்த மிதிவெடி ஒன்றில் சிக்கியதால் சிப்பாய் ஒருவர் கால்களை இழந்தார்.

ஓர் இராணுவச் சிப்பாய் கொந்திக்குளம் காட்டுப்பகுதியில் புலிகளின் மிதிவெடியில் சிக்கிக் கால்களை இழந்தார். அதேவேளை நேற்று முன்தினம் இறக்ககண்டிமுகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் கும்புறுப்பிட்டி, சலப்பையாறுமலை ஆகிய இடங்களில் முகாம் அமைத்துள்ளனர். (க)

# புதிய நிவாரணப் பங்கீட்டுப் பட்டியல்

இடம் பெயர்ந்தோருக்கான 4ஆம் கட்டக் கொடுப்பனவும், தொழில் பாதிப்புற்றோருக்கானதும், ரூபா 1500க்கு மேல் வருமானம் பெறுவோருக்கானதுமான 3ஆம் கட்ட உலர் உணவு விநியோகப்பட்டியல்.

| குடும்ப அங்கத்தவர்கள் | ஒருவர் | | இருவர் | | மூவர் | | நால்வர் | | ஐவர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெறுமானம் | கிலோ | ரூ.ச. | கிலோ | ரூ.ச. | கிலோ | ரூ.ச. | கிலோ | ரூ.ச. | கிலோ | ரூ.ச. |
| அரிசி | 2 | 26 00 | 4 | 52 00 | 5 | 65 00 | 6 | 78 00 | 8 | 104 00 |
| மா | 1 | 14 25 | 2 | 28 50 | 21/2 | 35.75 | 3 | 42 75 | 3 | 42.75 |
| சீனி | 1/2 | 15 00 | 1 | 30 00 | 1 | 30.00 | 11/2 | 45 00 | 2 | 60 00 |
| பருப்பு | 1/4 | 10.00 | 1/2 | 20.00 | 1/2 | 20 00 | 3/4 | 30.00 | 1 | 40.00 |
| விட்டாஸ்பிறே | | | | | 1 | 36.00 | 1 | 36.40 | 1 | 36.40 |
| மண்ணெண்ணெய் | 1/4லீற் | 2.00 | 1/4லீற் | 2.00 | 1/4லீற் | 2.00 | 1/2லீற் | 2 00 | 1/4லீற் | 2.00 |
| மீதிப்பெறுமதி சில்லறைப் பொருள்கள் அல்லது சீனி/விட்டாமில்க் | | 16.75 | | 21.50 | | 20.85 | | 17.85 | | 29.85 |
| மொத்தம் | | 84.00 | | 154 00 | | 210 00 | | 252.00 | | 315.00 |

உலர் உணவு விநியோகம் 10 - 11 - 1990 முதல் நடைபெற்று 25 - 11 - 1990 இல் முடிவடைய வேண்டும். இந்த முறை விநியோகத்திற்குப் பழைய குடும்ப அட்டைகள் பயன்படுத்தப்பட முடியாது. புதிதாகக் கிராமசேவையாளர்களால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையையே மக்கள் கொண்டுசென்று தமது உலர்உணவுப் பொருள்களை பெற்றுச்செல்ல வேண்டும். சில கிராம சேவையாளர்கள் இந்தப் புதிய அனுமதி அட்டையைக் கொடுக்காது இருப்பின் அவர்கள் உடனடியாக அவற்றைக் கொடுத்து முடித்துவிடவேண்டும். (லோ)

### பாஷையூரில்

மன், ஆகியோருக்கு சொந்தமான வீடுகள் சேதமடைந்துள்ளன அத்துடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன விருந்தினர் விடுதியும் சேதமடைந்தது. (21)

### பாதுகாப்பு

பகுதியை வைத்தியசாலைப் பகுதியாகப் பிரகடனம் செய்செய்ததுடன், வைத்தியசாலையைச் சூழ்ந்த பிரதேசத்தைக் குறிக்கும் வகையில் இவ் வலய எல்லைகளில் இரண்டு மீற்றர் அகலமும், இரண்டு மீற்றர் நீளமும் கொண்ட வெண் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. அதுமட்டுமல்லாது சிறிலங்காவின் தொலைக்காட்சியும், வானொலியும் உட்பட சர்வதேச தொலைதொடர்பு சாதனங்கள் அனைத்தும் இவ்வலயம் பிரகடனப்படுத்திய செய்தியை வெளியிட்டிருந்தமை அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு இருக்க நேற்று வைத்தியசாலையின் அருகே இடம்பெற்ற குண்டு வீச்சால் வைத்தியசாலையின் யன்னல் கண்ணாடிகளும், புதிதாக நேற்றுத்தான் போடப்பட்ட அஸ்பெஸ்ரஸ் ஓடுகளும் சிதறின. அத்துடன் வைத்தியசாலையின் உட்பகுதியில் நின்ற ஒருவர் காயமடைந்தார்; மேலும் வைத்தியசாலை வலயத்துக்குள் நின்ற நால்வர் காயமடைந்தனர். த. அருணாசலம், ராஜசிறீப்பிரியா (30), கே. விேனாதினி (19). எஸ். பொன்னுத்துரை (65), எஸ். வின்சன் (15) ஆகியோரே இங்கு காயமடைந்தோராவர்.

போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்த குண்டுவீச்சு நேற்று யாழ்நகரின் பிற பகுதிகளிலும் நகரை அண்டிய ஊர்களிலும் இடம் பெற்றுள்ளது (லோ)

### கொக்குவிலில்

வழியாக சென்றுகொண்டிருந்த செ. துரைரட்ணம் என்பவர் உடல் சிதறி ஸ்தலத்திலேயே பலியானார், மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலில் செல்வரட்ணம், தெய்வேந்திரராஜா, சிவபாதசுந்தரம், பாக்கியநாதன் ஆகியோரது வீடுகள் உட்பட வேறும் சில வீடுகள் சேதமடைந்தன. (க)

### வரையறுக்கப்பட்ட

குண்டொன்றை வீசியது. இச் சம்பவம் நேற்றுக்காலை 7.45 மணியளவில் இடம்பெற்றது. இவ்விமானம் மறுபடியும் சுற்றிப் பறந்து வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றியுள்ள, தெளிவாகவரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் இன்னுமொரு குண்டை வீசியது. இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று மதியவேளை யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இச்செய்திக்குறிப்பின் பிரதிகள் சமகாலத்தில் கொழும்பிலும், சர்வதேச, உள்ளூர் தொடர்பு சாதனங்களுக்கும் வழங்கப்பட்டன.

செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இக் குண்டுவீச்சுச் சம்பவத்தினால் சர்வதேச செ. சி. சங்கப் பாதுகாப்பில் இயங்கும் ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் ஒருவர் காயங்களுக்கு உள்ளானார். ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள பாதுகாப்புப் பகுதியில் இன்னும் நான்குபேர் காயமடைந்தனர். குண்டு வெடித்த அதிர்வினால் நான்கு ஆஸ்பத்திரிக் கட்டடங்களின் கூரைகளும், யன்னல்களும் தூக்கி வீசப்பட்டன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31–ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.